

நாகை மாவட்டம் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மாவட்ட விளையாட்டரங்கில் பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் இரவு நேரம் நடைபயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் மின்னொளி அமைக்கப்பட்டுள்ளதை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டு ஆய்வு செய்தார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதி குனியமுத்தூர் 89 வது வட்டத்தில், பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி 40க்கும் மேற்பட்டோர், தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக்கொண்டனர் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி ஏற்பாட்டில், அஜித் குமார் மற்றும் பூவேந்தன் தலைமையில், நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார் ,கே. ஈஸ்வரசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், மாவட்ட துணைச் செயலாளர்கள் ,அசோக்பாபு ஆறுக்குட்டி ஜெயந்தி பகுதிக் கழக செயலாளர் குனியமுத்தூர் லோகு பொதுக்குழு உறுப்பினர் கார்த்திகேயன் தென்னை சிவா, ஏ.கே.வேலுச்சாமி மனோஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!



உதகை, ஜன. 3 - நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் ஜன.4 அன்று நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் (4.01.2025 - சனிக்கிழமை) நாளை காலை 11.00 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்) மற்றும் அ. திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள் : 1. தலைமை கழக அறிவிப்பின்படி, 8.1.2025ம் தேதிக்குள் வாக்குச்சாவடி குழுவினர் (BLC) பட்டியலை நிறைவு செய்தல் குறித்து. 2. மாவட்டத்திலுள்ள அனைத்து நகரஒன்றியபேரூர்கிளை கழகங்களிலும், தமிழர் திருநாள் பொங்கல் விழாநிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து. 3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பா.மு.முபாரக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# 'வேர்களைத்தேடி' பண்பாட்டு கலைப் பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை தந்த - புலம்பெயர் தமிழர்களுடன் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று கலந்துரையாடினார்!

திருவள்ளூர், ஜன. 3 - கன்னியாகுமரி விருந்தினர் மாளிகையில் வேர்களைத்தேடி பண்பாட்டு கலை பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை தந்த புலம்பெயர் தமிழர்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடினர்.

இதனை தொடர்ந்து தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள் இளம் மாணவர்கள், தாய்த்தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், இந்த பண்பாட்டு பயணம் 'வேர்களைத் தேடி" என்ற பெயரில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் சுற்றுலாத்துறை, பண்பாட்டுத்துறை. இந்து சமய அறநிலையத்துறை, தொல்லியல் துறை, காவல் துறை மற்றும் வருவாய்த் துறை உள்ளிட்ட பிற துறைகளுடன் இணைந்து இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. இந்த இரண்டு கட்ட பயணத்தில் 157 அயலகத்தமிழ் மாணவ, மாணவியர்கள் முதன்முறையாக தமிழ்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு தமிழின் தொன்மை, தமிழர் வாழ்வியல் கலாச்சாரம் குறித்து விளக்கப்பட்டது. தமிழர்களின் கலைகளை அறிமுகப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் கட்ட பயணமாக உகாண்டாவை சேர்ந்த 1 புலம்பெயர் தமிழர், நார்வேயை சார்ந்த 1 புலம்பெயர் தமிழர், தென் ஆப்ரிக்காவை சேர்ந்த 1 புலம்பெயர் தமிழர், மொரிசியசை சார்ந்த 10 புலம்பெயர் தமிழர்கள், மலேசியாவை சேர்ந்த 11 புலம்பெயர் தமிழர்கள், இலங்கை சார்ந்த 6 புலம்பெயர் தமிழர்கள்,ஆஸ்திரேலியாவை சேர்ந்த 4 புலம்பெயர் தமிழர்கள் கனடாவை சேர்ந்த 1புலம்பெயர் தமிழர். அமெரிக்காவை சேர்ந்த 2புலம் பெயர் தமிழர்கள் மற்றும் மியான்மரை சேர்ந்த 1புலம்பெயர் தமிழர் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்த 38 அயலகத்தமிழ் மாணவ மாணவியர்களுடன் 29.12.2024 அன்று தொடங்கப்பட்டு 12.01.2025 அன்று வரை நடைபெறும். இக்கலை பயணமானது அயல்நாடுகளில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு வரவழைத்து தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு. தமிழ்நாடுஅரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இவ்வாறு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புலம்பெயர் தமிழக மாணவ - மாணவியர்க்ளுக்கு நினைவு பரிசு வழங்கினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், அயலகத் தமிழர் நல வாரிய துணை இயக்குநர் கிராமேஷ். அயலகத்தமிழர் நல வாரிய உறுப்பினர் மீரான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தூர் ராஜன், அலுவலர்கள், புலம்பெயர் தமிழக மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



புதுக்கோட்டை மாநகரம்,28 வது வார்டில் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான இராசு சந்தோஷ் ஏற்பாட்டில் துப்புரவுத் தொழிலாளர்கள் 100 பேருக்கு சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் அரு. வீரமணி, துணை மேயர் எம்.லியாகத் அலி, நகர அவைத் தலைவர் அ.ரத்தினம், பொதுக்குழு உறுப்பினர் என். சாத்தையா, மாநகர துணை செயலாளர் மா. மணிவேலன், மாவட்டப் பிரதிநிதி ஆ.ஜேம்ஸ், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கவிஞர் ஆ.மரிய எட்வின் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

### பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி. எல்.சி.) கூட்டங்களை

# நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகர , பேரூர் பகுதியில் கூட்டிட முடிவு!

## மாவட்டக் கழகச் செயற்குழுத் தீர்மானம்! என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஜன. 3 - நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்கள் நாகை ஆர். அருள்செல்வம், கீழ்வேளூர் இரா.சங்கர், வேதாரண்யம் வி.ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப. கோவிந்தராசன், இல.மேகநாதன், மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஆரூர்மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன், கற்பகம்நீலமேகம், மாவட்டக் கழக பொருளாளர் மு. லோக நாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மை நல பிரிவு துணை செயலாளர் சாகுல் ஹமீது, ஒன்றியச் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா. குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பாண்டியன், எல்.எஸ்.ஈ.பழனி யப்பன், எஸ்.பன்னீர்செல்வம், கோசி.குமார், உமாசெந்தாமரை, பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சய லிங்கம், மரியசார்லஸ், சி. சுப்பரமணியன், முகமது சுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஆர்.துரை ராசு, கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், கே.எஸ். சாகுல்ஹமீதுராஜா, எஸ். வி.டி.அருள், எஸ்.பால் ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், இளம்.சுந்தர், எஸ். சுந்தர் த.தமயந்தி, வ.கமல், எஸ்.வெற்றிசெல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், கே.சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா, பன்னீர்செல்வம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, துணை அமைப்பாளர் விமல்மொக்கை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்ள்

இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை, இந்திய ஜனநாயகம் ஒளிரும் வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க அரசியல் சட்டத்தை உருவாக்கி தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை நாடாளுமன்றத்தில் தரம் தாழ்ந்து, அவதூறாகப் பேசி இழிவுப்படுத்திய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என்றும், அம்பேத்கரை இழிவு படுத்திய அமிர்ஷாவை கண்டித்து நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூரில் 17 இடங்களில் அறிவித்த ஒரு மணி நேரத்தில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள், சார்பு அணி நிர்வாகி கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், தமிழ்நாட்டில் விழுப்புரம், கடலூர், கல்லகுறிச்சி, திருவண்ணா மலை, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை பாதிப்பு ஏற்படுத்திய பெஞ்சல் புயலை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்எடுத்தமுன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மழை வெள்ளத்தால் பெரும் பதிப்பில் இருந்து மீட்க நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், கூட்டாட்சி கோட்பாடுகளுக்கும், ஜனநாயகத்திற்கு எதிராக மாநில உரிமைகளைப் பறிக்கும் நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதவை ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என் றும், இந்த மசோதாவை திரும்ப பெற வேண்டும் என்றும்,

நடைபெற்று முடிந்த 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக கிளைகள், வார்டுகள் தோறும் 100 வாக்காளர்களுக்கு ஒரு பூத் கமிட்டி உறுப்பினர் என பூத்வாரியாக பூத் கமிட்டி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, அந்த பூத்கமிட்டி உறுப்பினர்கள் பட்டியல் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மூலம் மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எதிர்வரும் 2026 சட்ட மன்ற தேர்தலில் வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! என்ற தலைமைக் கழக வேண்டுகோளுக்கிணங்க தேர்தல் களப்பணி தொடங்க இருப்பதால் பூத்கமிட்டி உறுப்பினர்களின்(பி.எல்.சி.) மாற்றம் ஏதும் செய்ய வேண்டியிருந்தால் ஒருவார கலத்தில் மாற்றம் மற்றும் திருத்தம் செய்து மாவட்டக் கழகத்திடம் வழங்கிட வேண்டும் என்றும் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் பூத்கமிட்டி உறுப்பினர்களின் (பி.எல்.சி. ) கூட்டங்களை சட்ட மன்ற தொகுதி பார்வையார்கள் முன்னிலையில் நடத்திடுவது என்று ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை கேட்டுக் கொள்வது என்றும்.

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள், மாவட்ட சார்பு அணி சார்பிலும், உள்ளாட்சி அமைப்புகளின் சார்பிலும், ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுது பொருட்கள், ஆதரவற்ற, முதியோர் இல்லங்களில் உணவு உடை வழங்குதல், மரக்கன்றுகள் நட்டுதல், வழங்குதல், நலதிட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திட்ட அனைவருக்கும் மாவட்டக் கழகம் சார்பில் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கெள்ளுவது என்றும் மேலும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் மாவட்டக் கழகம் சார்பில் அறிவிக்கப்படும் தேதிகளில் தலைமைக் கழக பேச்சாளர்கள், இளம் பேச்சாளர்களை கொண்டு பொதுக் கூட்டங்களை சிறப்பாக நடத்திடுவது என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி ஆகியோரிடம் நெருங்கி பழகியவரும், நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட, தமிழ்நாட்டின் வளர்ச்சியில் பெரும் உதவியாக இருந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவிற்கும், முரசொலியில் 27 ஆண்டுகள் பணியாற்றிய நிர்வாக மேலாளர் ஜி. இளங்கோ மறைவிற்கும் இரங்கள் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்ற ப் பட்டது.

### மணிப்பூரில் மீண்டும் வன்முறை:

# பிரதமர் மோடி மன்னிப்பு கேட்க வேண்டும்!

## காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன.3 - மணிப்பூர் விவகாரங்களுக்காக அம்மாநில முதல் மந்திரி பிரேன் சிங் மன்னிப்பு கேட்டிருக்கும் நிலையில், பிரதமர் மோடியும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "பிரதமர் மோடி மணிப்பூருக்குச் சென்று அம்மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் மே 4, 2023 முதல் அவர் நாடு மற்றும் உலகம் முழுவதும் ஜெட் விமானத்தில் பயணம் செய்தபோதும் அவர் வேண்டுமென்றே அம்மாநிலத்துக்கு வருவதைத் தவிர்த்தார். மணிப்பூர் மக்களால் இந்தப் புறக்கணிப்பை புரிந்து கொள்ள முடியாது" என்று பதிவிட்டுள்ளார்.

**மணிப்பூரில் குண்டுவெடிப்பு**

இந்நிலையில் மணிப்பூர் முதல்வர் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் மணிப்பூரில் குண்டு வெடித்தது.

இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.




உதகை நகர வாக்கு சாவடி நிலைய முகவர்கள் மற்றும் பி.எல்.சி. உறுப்பினர்கள் ஆய்வுக் கூட்டம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. நகரச் செயலாளர் ஜார்ஜ் தலைமை வகித்து வரவேற்றுப் பேசினார். உதகை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் கலந்து கொண்டு சட்டமன்றத் தேர்தல் குறித்து மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, மாவட்டப் பிரதிநிதிகள் வெங்கடேஷ், தம்பி இஸ்மாயில், கார்த்தி, நகர மன்றத் தலைவர் வாணீஸ்வரி, நகர அவைத் தலைவர் ஜெயகோபி, நகரப் பொருளாளர் அனில் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ம.த. மல்லையன்

**சனவரி 3 (2014)**



தந்தை பெரியார்,
பேரறிஞர் அண்ணா,
தலைவர் கலைஞர் ஆகியோர்
வழிநின்று கம்பம் பகுதியில் கழகம்
வளர்த்தவர்.

க.புதுப்பட்டி பேரூராட்சி மன்றத்
தலைவராக தொடர்ந்து பதினைந்து
ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து,
அறிஞர் அண்ணா முதல்வராக
இருந்த சமயத்தில் அப்பகுதியில் அரசு
உயர்நிலைப் பள்ளியும் – தலைவர்
கலைஞர் முதல்வராக இருந்த போது
எண்ணற்ற நலத்திட்டங்களையும்
கொண்டு வந்து அப்பகுதி மக்களிடம்
கழகத்திற்கு நற்பெயரைப்
பெற்றுத் தந்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்,
விலைவாசி உயர்வு எதிர்ப்பு
போராட்டம் மற்றும் கழகம் நடத்திய
அனைத்துப் போராட்டங்களிலும்
பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**